# செய்தி வெளியீடு

## இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவராக கலாநிதி அஜித் ரவீந்திர டி மெல் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மதிப்பிற்குரிய அறிஞர் கலாநிதி அஜித் ரவீந்திர டி மெல் அவர்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவராக ஜனவரி 02, 2025 அன்று பொறுப்பேற்றார்.

2000 ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 4(1)(ஈ) மற்றும் 4(2) ஆம் பிரிவுகளுக்கு அமைவாக, ஜனாதிபதி ஆலோசனையாளர் திரு ராஸிக் ஸரூக் அவர்களைத் தொடர்ந்து அதிமேதகு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அவர்கள் கௌரவ. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில், டாக்டர். அஜித் ரவீந்திர டி மெல் அவர்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் தலைவராகவும் உறுப்பினராகவும் நியமித்துள்ளார்.

கலாநிதி டி மெல் 2015 ஆம் ஆண்டு முதல் ருகுணு பல்கலைக்கழகத்தில் கணிதப் பிரிவில் சிரேட்ட விரிவுரையாளராகவும், 2018 ஆம் ஆண்டு முதல் மொரட்டுவ பல்கலைக்கழக கணிதத் துறையில் வருகை விரிவுரையாளராகவும் சேவையாற்றி வருகின்றார்.

அவர் அமெரிக்காவில் உள்ள மிசோரி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியலை பிரதானமாகக் கொண்டு கணிதத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். அவரின் கல்விச் சாதனைகள் இலங்கையின் களனிப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் இளங்கலை விஞ்ஞானம் (விசேட கௌரவ), இலங்கையில் உள்ள ருகுணு பல்கலைக்கழகத்தில் முதுத்தத்துவமானி, அமெரிக்காவில் உள்ள மிசோரி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் புள்ளியியல் செறிவுடன் கணிதத்தில் முதுமானி, அமெரிக்காவில் உள்ள சாம் ஹுஸ்டன் ஸ்டேட் யுனிவர்சிட்டியின் புள்ளிவிபரத்தில் முதுமானி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

கலாநிதி டி மெல் ருகுணு பல்கலைக்கழகம் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் செனட் உறுப்பினர் போன்ற முக்கியமான கல்விப் பாத்திரங்களை வகித்துள்ளார். மேலும், அவர் ருகுணு பல்கலைக்கழகத்தில் கணிதவியல் துறையின் தலைவராகவும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் கணக்கீட்டு கணிதத் துறையின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். கலாநிதி டி மெல், ருகுணு பல்கலைக்கழகத்தில் நிதிக் கணிதம் மற்றும் கைத்தொழில் புள்ளியியல் ஆகியவற்றில் இளங்கலை அறிவியல் பட்டம் மற்றும் ஜெனரல் சேர் ஜான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் தரவு விஞ்ஞானம் மற்றும் வியாபாரப் பகுப்பாய்வில் இளங்கலை அறிவியல் பட்டங்களை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தார்.

அவர் பல சர்வதேச பல்கலைக்கழங்களில் பதவிகளை வகித்ததுடன், அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள ஹன்ட்ஸ்வில்லியில் உள்ள சாம் ஹுஸ்டன் மாநில பல்கலைக்கழகத்தில் பட்டதாரி ஆசிரியர் உதவியாளர், நியூயார்க்கில் உள்ள பிங்காம்டன் மாநில பல்கலைக்கழகத்தில் புள்ளியியல் உதவி பேராசிரியர் மற்றும் வருகை தரும் உதவி ஆசிரியர் பதவிகளை வகித்துள்ளார். அமெரிக்காவின் ரோல்லாவில் உள்ள மிசோரி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் கணிதம் மற்றும் புள்ளியியல் துறையில் பதவி வகித்துள்ளார். புள்ளியியல், காப்புறுதி மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் பல ஆய்வு வெளியீடுகளை எழுதியுள்ளார்.

2008 ஆம் ஆண்டில், கலாநிதி டி மெல், டெக்சாஸில் உள்ள ஹன்ட்ஸ்வில்லில் உள்ள சாம் ஹுஸ்டன் மாநில பல்கலைக்கழகத்தின் கணிதம் மற்றும் புள்ளியியல் துறையிலிருந்து புள்ளியியல் துறையில் சிறந்த பட்டதாரி மாணவர் விருதைப் பெற்றார். அமெரிக்க கணித சங்கம் (யுஆளு), அமெரிக்க புள்ளியியல் சங்கம் (யுளுயு), மற்றும் அறிவியல் முன்னேற்றத்திற்கான இலங்கை சங்கம் (ளுடுயுயுளு) போன்ற தேசிய மற்றும் சர்வதேச தொழில்முறை சங்கங்களின் பல விருதுகள் இவரைப் பாராட்டி வழங்கப்பட்டுள்ளன. அவர் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம், அமெரிக்க கணித சங்கம் மற்றும் அமெரிக்க புள்ளியியல் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளார்.





**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**
11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
கொழும்பு 01.

| இணையத்தளம்: www.ircsl.gov.lk | மின்னஞ்சல்: info@ircsl.gov.lk |
|---|---|
| தொலைபேசி: 011 2396184 - 9 | பக்ஸ்: 011 2396190 |


**16.01.2025**